# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2394 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்

**கவனிக்க.- *2024.07.12* ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (IIஅ) - விளம்பரங்கள் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள் கீழே பிரசுரிக்கப்படுகின்றன.**

## பதவிகள் - வெற்றிடம்

### பகிரங்க சேவைகள் ஆணைக்குழு

### சட்ட உத்தியோகத்தர்(நிறைவேற்று சேவை வகுதி - தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2024

பகிரங்கச் சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் வெற்றிடமாக உள்ள சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு (01) பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **ஆட்சேர்ப்பு முறை:**

பகிரங்கச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கு அமைய அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்தி, அறிவித்தலில் குறிப்பிடப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டு வெற்றிடத்திற்காக ஆட்சேர்க்கப்படுவார். பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கு (இலக்கம் 07 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) அமைய தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியானது பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

02. **தேவையான தகைமைகள் :**

i. ***கல்வி /தொழில் தகைமைகள்*** :

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்.

ii. ***அனுபவம்***

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் ஏற்புடைய பதவியில் மூன்று வருடங்களுக்குக் (03) குறையாத முனைப்பான தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல். (முனைப்பான தொழில் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் அனுபவம் பெற்றுக்கொள்ளப்பட்ட காலம், திகதி மற்றும் உத்தியோகப்பூர்வ முத்திரை என்பவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டு நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.)

அல்லது

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் அரச நிறுவனமொன்றில் சட்டத்துறையில் ஏற்புடைய பதவியில் *மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

(இவ்விடயங்களை செயலாளர் / திணைக்களத் தலைவரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்)

**குறிப்பு:**

அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் விண்ணப்பதாரியினால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். சேவைக் காலம் ஆரம்பமாகும் மற்றும் முடிவுறும் திகதியைத் தெளிவாகக் குறிப்பிடும் சான்றிதழ்கள் இணைக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படலாம்.

* சட்ட விவகாரங்கள் தொடர்பான பதவி என்பது, சட்டத்துறையில் பட்டம் அல்லது உச்ச நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல் ஆட்சேர்ப்பிற்கான அடிப்படைத் தகைமையாகும் பதவியாகும்.

iii. ***உடற் தகைமைகள் :***

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியில் கடமையாற்றுவதற்கும் போதியளவு உடல் மற்றும் உள ரீதியாகத் தகைமைப் பெற்றிருத்தல் வேண்டும்.

iv. ***வேறு தகைமைகள்***

- விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.
- கணினி அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், மின்னஞ்சல் மற்றும் Ms-Office ஐ சிறந்த முறையில் பயன்படுத்தக் கூடியவராயிருத்தல் வேண்டும்.
- இவ் அறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் தினத்தன்று மேற்குறித்த அனைத்துத் தகைமைகளையும் எல்லாவிதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

03. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

i. இப்பதவி நிரந்தமானது. ஓய்வூதியம் உரித்துடையது. தங்களுக்கு உரித்தான ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்குத் தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். விதவைகள், அநாதைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். தாங்கள் காலத்துக்குக் காலம் அரசாங்கம் பிரகடனப்படுத்தும் விதத்தில் இந்த நிதியத்துக்கு உதவுத் தொகைகள் செலுத்துதல் வேண்டும்.

ii. இப்பதவி 03 வருட தகுதிகூர் நிலை காலத்திற்கு உட்படுத்தப்படும். பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்களுக்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உள்ளவாறு முதலாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

iii. 2020.10.16 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல. 18/2020 இன் ஏற்பாடுகளுக்கு அமைய உரிய மற்றைய அரசகரும மொழியில்/ அரசகரும மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

iv. இந்நியமனம், பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்க நிதி ஒழுங்கு விதிகளுக்கும் திணைக்களத்துக்குரிய ஏனைய கட்டளைகளுக்கும் உட்பட்டிருக்கும்.

04. **வயதெல்லை :**

விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

05. ***சம்பள அளவுத் திட்டம் :***

இல. 03/2016 மற்றும் 2016.02.25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரம், இப்பதவிக்கு, ரூபா 47,615 - 10×1,335 - 8 × 1,630-17 ×2,170 - ரூபா 110,895.00 (SL-1-2016) எனும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும்.

06. **பதவிக்குரிய பணிகள் :**

i. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்கள்/முடிவுகளுக்கு எதிராக நிருவாக மேன்முறையீட்டு நியாயசபை/ மனித உரிமைகள் ஆணைக்குழு/ மேன்முறையீட்டு நீதிமன்றம்/ உயர் நீதிமன்றம்/ பொது மனுக்குழு/ ஏனைய பாராளுமன்ற குழுக்கள்/ அரசகரும மொழிகள் ஆணைக்குழு மற்றும் குறைகேள் அதிகாரியிடம் (ஓம்புட்ஸ்மன்) மற்றும் ஏனைய நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளுக்கு ஆணைக்குழுவின் நிலைப்பாட்டினை தெளிவுபடுத்தி ஏற்புடையவாறு தோற்றுதல்/ பிரதிநிதித்துவப்படுத்தல்.

ii. சட்ட நடவடிக்கைகளுக்குரிய அனைத்து அறிக்கைகளையும் தயாரித்தல் மற்றும் கோவைகளைப் பேணுதல்.

iii. சட்ட விடயங்கள் தொடர்பிலான நடவடிக்கைகளை சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து ஒருங்கிணைப்பு செய்தல்.

iv. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பில் ஏற்புடைய அறிக்கைகளைத் தயாரித்தல் / அவ் ஆணைக் குழுவினால் அழைக்கப்படுகையில் ஏற்புடைய தகவல்களுடன் தோற்றுதல்.

v. பகிரங்க சேவை ஆணைக்குழு சார்பாக கௌரவ சட்டமா அதிபர் தோற்றாத வழக்குகளின் போது ஏற்புடைய நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆணைக்குழு சார்பாகத் தோற்றுதல்.

vi. நிறுவனத் தலைவரினால் கையளிக்கப்படும் வேறு பணிக் கடமைகள்.

07. தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்குப் பின்வரும் புள்ளி வழங்கும் திட்டம் அடிப்படையாகக் கொள்ளப்படும்.

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்**<br>**குறிப்பு - ஆகக் கூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.** | | 15 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்ட சட்டத்துறையில் முதுகலைமாணி பட்டம் | 12 | |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2024, ஓகத்து மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூலை மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| | (ஆ) இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கற்கைகள் நிறுவகத்தில் பெற்றுக் கொண்ட முதுகலைமாணி சட்ட டிப்ளோமா | 11 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்ட சட்டத்துறையில் முதுகலைப் பட்டதாரி டிப்ளோமா | 10 | |
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்ட<br>முதலாம் வகுப்பு சித்தியுடனான சட்டத்துறையில் இளமாணிப் பட்டம்<br>இரண்டாம் வகுப்பு மேல் நிலை சித்தியுடனான சட்டத்துறையில் இளமாணிப் பட்டம்<br>வகுப்பு சித்தியுடனான சட்டத்துறையில் இளமாணிப் பட்டம்<br>சாதாரண சித்தியுடனான சட்டத்துறையில் இளமாணிப் பட்டம் | 06<br>05<br>04<br>02<br>06 | |
| | (உ) சட்டக் கல்லூரி இறுதியாண்டில் முதல் வகுப்பில் தேர்ச்சி<br>சட்டக் கல்லூரி இறுதியாண்டில் இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி<br>**(குறிப்பு** - சட்டக் கல்லூரி இறுதிப் பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சியுடன் சித்தியடைந்திருந்தால் மட்டுமே மேற்குறித்த 06 புள்ளிகள் வழங்கப்படும்.) | 04 | |
| 02 | **மேலதிக அனுபவம்**<br>வழக்குகளுக்கு ஏற்புடைய ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் திறந்த நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைத்தல் | | 55 |

| | நீதிமன்றம் முன்னிலையில் வழக்குத் தொடரலுக்கான உச்சப் புள்ளிகள் (வழக்கொன்றுக்கு 0.5) | நீதிமன்றம் முன்னிலையில் தோற்றுதல் (வழக்கொன்றுக்கு 0.5) |
|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 06 | 06 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 05 | 05 |
| மேல் நீதிமன்றம் | 03 | 04 |
| மாவட்ட நீதிமன்றம் | 05 | 05 |
| நியாய சபைகள் (AAT) | 05 | 06 |
| மனித உரிமைகள் ஆ. கு./ நியாய சபைகள்(LT) | 02 | 03 |

**குறிப்பு**: மேற்குறித்த தகைமைகளை சான்றுப்படுத்துவதற்கு ஏற்புடைய வழக்குத் தீர்ப்புக்களின் பிரதிகள் அல்லது இறுதியாக வழக்கு இடம்பெற்ற திகதியிலான வழக்கு அறிக்கையின் உறுதிப்படுத்திய பிரதியை நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்பித்தல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 03 | **மொழித்திறன்**<br>**(அதிகூடிய தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்)**<br>**(1) இணைப்பு மொழி** | | 10 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஆங்கில மொழியைப் பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் | 04 | |
| | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய அளவிலான (Moot Court Competitions) போட்டிகளில் வெளிப்படுத்தப்பட்ட ஆங்கில மொழிப் புலமை.<br>**தனியாள்**<br>i. முதல் நிலை/சிறந்த தகுதி - 03<br>ii. இரண்டாம் இடம் - 02<br>iii. மூன்றாம் இடம் /ஏனைய தகைமைகள் - 01<br>**குழுக்கள்**<br>i. முதல் நிலை/சிறந்த தகுதி - 03<br>ii. இரண்டாம் இடம் - 02<br>iii. மூன்றாம் இடம் /ஏனைய தகைமைகள் - 01 | 03<br><br>03 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஆங்கில மொழிக்காகப் பெற்றுக் கொண்ட டிப்ளோமா அல்லது வேறு ஏதேனும் ஒரு நிறுவனத்திலிருந்து ஆங்கில மொழிக்காகப் பெற்றுக்கொண்ட SLQF 3 அல்லது அதற்கு மேற்பட்ட டிப்ளோமா அல்லது அரச பயிற்சி நிறுவனமொன்றில் / அரச பயிற்சி நிறுவனத்துடன் இணைந்த நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது 1500 மணித்தியாலங்கள் பயின்று ஆங்கில மொழிக்கு டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். | 02 | |
| | (ஈ) விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் இறுதித் திகதிக்கு உடன்முன்னரான 02 வருடங்களில் கல்வி பொதுத் தராதரப் (உயர்தரம்) பரீட்சையில் ஆங்கில மொழியில் ஆகக்குறைந்தது திறமைச் சித்தி பெற்றிருத்தல் Edexel அல்லது Cambridge அல்லது IELTS இல் மொத்தப் புள்ளிகள் 6.5 அல்லது அதற்கு மேல், TOFEL – IBT 79 அல்லது அதற்கு மேல், TOEFL – CBT 213 அல்லது அதற்கு மேற்பட்ட அல்லது TOEFL – PBT 550 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருத்தல். | 01 | |
| | (உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஆங்கில மொழிக்குப் பெற்றுக் கொண்ட உயர் சான்றிதழ் அல்லது வேறு நிறுவனத்திடமிருந்து ஆங்கிலத்திற்காகப் பெற்றுக் கொண்ட SLQF 2 நிலை சான்றிதழ். | | |
| | **(II) மற்றைய அரசகரும மொழி (சிங்களம்/தமிழ்)** | 06 | |
| | (அ) அரசாங்கத்தின் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனத்திடமிருந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட டிப்ளோமா பாடநெறி (கால எல்லை 06 மாதங்களுக்கு/720 மணித்தியாலங்களுக்குக் குறையாத) | 05 | |
| | (ஆ) அரசாங்கத்தின் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் பாடநெறி (கால எல்லை 03 மாதங்களுக்கு/ 360 மணித்தியாலங்களுக்குக் குறையாத) | | |
| | (இ) க. பொ. த. (சா.தர) பரீட்சையில் (உள்ளூர் அல்லது லண்டன்) சிங்கள மற்றும் தமிழ்மொழியை முதல் மொழியாக சித்தி பெற்றிருத்தல் (இரண்டு மொரிழகளிலும் ஆகக் குறைந்த தரத்திற்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப் படும்)<br>விசேட சித்தி<br>அதி திறமைச் சித்தி<br>திறமைச் சித்தி<br>சாதாரண சித்தி | <br>05<br>04<br>03<br>02 | |
| | (ஈ) க. பொ. த. (சா.தர) பரீட்சையில் (உள்ளூர் அல்லது லண்டன்) சிங்கள மற்றும் தமிழ்மொழியை இரண்டாவது மொழியாக சித்தி பெறுதல்<br>அதி திறமைச் சித்தி<br>சாதாரண சித்தி | <br>02<br>01 | |
| 4 | **நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறன்**<br>i. தொழில் மற்றும் அதன் நெறிமுறைகள் குறித்த மனப்பாங்கு<br>ii. சட்டத்துறையின் நவீன போக்குகள் பற்றிய அறிவு (நிர்வாக சட்டம், மனித உரிமைகள் சட்டம், நியதிச்சட்டம், சான்றியல் சட்டம் குறித்த விசேட கவனத்துடன்)<br>iii. சரளமாகவும் தர்க்க ரீதியாகவும் கருத்துக்களைத் தெரிவிக்கும் ஆற்றல் | <br>04<br>10<br>06 | 20 |
| | **மொத்தம்** | | **100** |

08. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்**:

சகல வழிகளிலும் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின் போது அனைத்து ஆவணங்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் விண்ணப்பதாரியினால் உரியவாறு சான்றுப்பத்தப்பட்ட பிரதிகளையே சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தவதற்குப் பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

i. ஆட்களை பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம் அவர்களினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு

09. **விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க வேண்டிய முறை**

(i) விண்ணப்பப்படிவங்களை 2024.08.15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், பகிரங்கச் சேவை ஆணைக்குழு, இலக்கம் 1200/9, இராஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல" என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபால் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப் படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது.
விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை A4 அளவு தாளில் தயாரித்தல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 04 வரை முதலாம் பக்கத்தில் அமையுமாறும் இலக்கம் 05 தொடக்கம் 07 வரை இரண்டாம் பக்கத்தில் அமையுமாறும் இலக்கம் 08 தொடக்கம் 11 வரை மூன்றாம் பக்கத்தில் அமையுமாறும் தயாரித்து தனது கையெழுத்துக்களினால் பூரணப்படுத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட அலுவலர் தரம் - III பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபரினால் / சமாதான நீதவான் ஒருவரினால்/ சத்தியப் பிரமாண ஆணையாளரினால் / சட்டத்தரணி ஒருவரினால் / பிரசித்தி பெற்ற நொத்தாரிஸ் ஒருவரினால் / முப்படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகதத்தர் அல்லது ரூபா 47,615.00 ஐ அல்லது அதற்கு மேல் மாதாந்த திரட்டு வேதனத்தைப் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள நிரந்தர பதவிநிலை அலுவலர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பப்படிவங்களைத் தாம் சேவையாற்றும் திணைக்களத்தின் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகக் காணப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் காணாமல் போதல் அல்லது நிராகரிக்கப்படுதல் தொடர்பான எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

10. **தவறான தகவல்களை வழங்குதல்**

தங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும் ஏதேனும் தகவல்கள் பொய்யானவை அல்லது தவறானவை என ஆட்சேர்ப்புக்குப் முன்னர் தெரியவருமிடத்து தங்களது பரீட்சார்தத் தகைமை இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவல்கள் ஆட்சேர்ப்புக்குப் பின்னர் தெரியவருமிடத்து அதற்குரிய நடவடிக்கைகளுக்கு உட்பட்ட வகையில் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

11. வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாமல் விடும் உரிமை பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரியதாகும்.

12. இவ் வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிப் பதங்களுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழிப் பதமே மேலோங்கி நிற்கும்.

13. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் அல்லது இந்த ஆட்சேர்ப்பு செயன்முறையில் ஏதேனும் சிக்கலான சூழ்நிலை ஏற்பட்டால், அது தொடர்பில் பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

பகிரங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புக்கமைய,

டபிள்யூ. எச். எம். எம். சீ. கே. தயாரத்ன,
செயலாளர்,
பகிரங்க சேவை ஆணைக்குழு.

பகிரங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
1200/09, இராஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல,
2024.07.02.

(அலுவலக உபயோகததிற்கு)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பகிரங்க சேவை ஆணைக்குழு**

**சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்று உத்தியோகத்தர் வகுதியின் தரம் III ) பதவிக்குத் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் - 2024**

விண்ணப்பிக்கும் மொழிமூலத்திற்குரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக

சிங்களம் - 2 தமிழ் - 3 ஆங்கிலம் - 4

01. 1.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்): ....................................................................
....................................................................
(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதிப் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ....................................................................
....................................................................
(உ-ம் : GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்) :....................................................................
....................................................................

1.4 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

02. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ..................................................................
..................................................................................................................

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில் /தமிழில்) : ..................................................................
..................................................................................................................

03. 3.1 பால்நிலை: ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

3.2 பிறந்த திகதி : வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.3 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது: (2024.08.15)

வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.4 தொலைபேசி இலக்கம்: நிலையானது :.............................................
கையடக்க :.............................................

3.5 மின்னஞ்சல் முகவரி : ..................................................................................................

04. கல்வித் தகைமைகள்:
பட்டம் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்வதற்கு ஏற்புடைய சான்றிதழ் பற்றிய விபரம் :

i. வழங்கப்பட்ட திகதி :................................................
ii. பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் :................................................
iii. பட்டத்தின் அல்லது கல்விச் சான்றிதழின் பெயர் :................................................
iv. பட்டம் அல்லது கல்விச் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி :................................................
v. வகுப்பு :................................................
vi. பட்டத்தைப் பயின்ற மொழிமூலம் :................................................

05. மேலதிகக் கல்வித் தகைமைகள்:

| பாடநெறி | பெற்றுக்கொண்ட நிறுவனம் | தகைமை/சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

06. சட்டத் துறையில் பெற்றுள்ள அனுபவம் :

| | நீதிமன்றம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | நீதிமன்றம் முன்னிலையில் தோற்றிய எண்ணிக்கை |
|---|---|---|
| உயர் நீதிமன்றம் | | |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | | |
| மேல் நீதிமன்றம் | | |
| மாவட்ட நீதிமன்றம் | | |
| நியாயசபைகள் (AAT) | | |
| மனித உரிமைகள் ஆ. கு./ நியாய சபைகள் (LT) | | |

7.1 மொழித்திறன் :

| | பேச்சு | | | எழுத்து | | | வாசிப்பு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மிக நன்று | நன்று | மிகக் குறைவு | மிக நன்று | நன்று | மிகக் குறைவு | மிக நன்று | நன்று | மிகக் குறைவு |
| சிங்களம் | | | | | | | | | |
| தமிழ் | | | | | | | | | |
| ஆங்கிலம் | | | | | | | | | |

7.2 இணைப்பு மொழி மற்றும் மற்றைய அரசகரும மொழி (சிங்களம்/ தமிழ்) தொடர்பில் பயின்றுள்ள பாடநெறிகளின் விபரங்கள் (பட்டம்/டிப்ளோமா/சான்றிதழ் பாடநெறி)
..................................................................................................................
..................................................................................................................
..................................................................................................................
..................................................................................................................
..................................................................................................................
..................................................................................................................
..................................................................................................................
..................................................................................................................
..................................................................................................................
..................................................................................................................

08. தாங்கள் ஏதும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் எப்போதாவது குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? ...........................
(உரிய ✓ கூட்டில்) அடையாளத்தை இடுக. தங்களது பதில் ஆம் எனின் விபரங்களைத் தருக.)
ஆம் ☐ இல்லை ☐
..................................................................................................................

09. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் சரியானதும் உண்மையானதுமாகும் என்பதை கௌரவமாக வெளிப்படுத்துகின்றேன். இங்கு ஏதேனும் பகுதிகளை பூரணப்படுத்தாமல் மற்றும்/ அல்லது தவறாகப் பூரணப்படுத்தியதன் காரணமாக ஏற்படும் நட்டத்தைப் பொறுப்பேற்க உடன்படுகின்றேன். மேலும் இங்கு சகல பகுதிகளையும் சரியாகப் பூரணப்படுத்தியுள்ளேன் என்பதையும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானதென நிரூபிக்கப்படுமிடத்து நியமனம் பெறுவதற்கு முன்னர் தகைமையற்றவனாக்கப்படுவேன் என்றும் நியமனத்தின் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்குக் கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும், கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையை நடாத்துதல் தொடர்பில் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படுவேன் என்பதையும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

...................................... ....................................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

10.0 **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்ற திரு. /திருமதி/செல்வி ........................................... ............... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் .................... ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தையிட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :...................................... ....................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தர் பெயர் :...............................
பதவி :................................
முகவரி :..............................................
திகதி :...............................
(உத்தியோகப்பூர்வ முத்திரை மூலம் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்)

11.0 **திணைக்கள/ நிறுவனத் தலைவரின் உறுதியுரை** (அரசாங்க / மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)
இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி / செல்வி .................................. தற்போது இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ......................................ஆகக் கடமை புரிகின்றார் என்பதோடு, அவரது விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

...............................,
திணைக்கள / நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர்:............................................
பதவி :............................................
முகவரி :............................................
திகதி :...............................

(உத்தியோகப்பூர்வ முத்திரை மூலம் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்)

07-376

---

**கவனிக்க.- 2024.07.19 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (IIஅ) - விளம்பரங்கள் பகுதியில் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் கீழே பிரசுரிக்கப்படுகின்றன.**

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் /(கண்டிய/பொது) பதிவாளர் பதவி - மாத்தளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தானவராகவும் பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்புச் சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடயப் பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, ஒகத்து மாதம் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2024, யூலை 08.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தளை | உக்குவெல | மெதெசிய பற்று கிழக்கு பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் மற்றும் மாத்தளை தெற்கு பிரிவின் விவாக (கண்டி/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், மாத்தளை. |

07-587

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி (சிங்களம்) – மாத்தளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினத்தன்று, விண்ணப்பதாரர் 30 வயதுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வயதாகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் /தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடயப் பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, ஓகத்து மாதம் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யு. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2024, யூலை 02.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தளை | இரத்தோட்டை | மாத்தளை தெற்கு பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தளை |
| மாத்தளை | உக்குவெல | மாத்தளை தெற்கு பிரிவின் உக்குவெல பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தளை |

07-588

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

*சிங்கள மொழி பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – மாத்தளை மாவட்டம்*

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், வயது 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்புச் சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடயப் பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

5. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி. மீ. வரையிலான தூரத்தில் பிரிவில் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு, பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

7. இதற்கு தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, ஓகத்து மாதம் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யு. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2024, யூலை 03.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தளை | தம்புள்ளை | தம்புள்ளை நகர பிரிவின் பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தளை. |

07-589

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

*சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் /மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்*

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தானவராகவும் பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்புச் சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடயப் பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, ஓகத்து மாதம் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யு. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2024, யூலை 05.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | ரிதிமாலியத்த | மஹியங்கனை நாகதீப பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பிந்தென்ன பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், பதுளை. |

07-590

---

**பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

இலங்கை பொறியியல் சேவையின் தரம் III இற்கு உத்தியோகத்தர்களை மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்- 2024

நாடு முழுவதிலும் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்களில் இலங்கை பொறியியல் சேவையின் III ஆம் தரத்தைச் சேர்ந்த சிவில், பொறிமுறை, மின்பொறியியல் ஆகிய வகுதிகளைச் சேர்ந்த பதவிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவைக்குரிய பொறியியல் உதவியாளரொருவராக அல்லது புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ பதவியொன்றை வகிக்கும் அலுவலரொருவராக அல்லது ஏனைய அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிகின்ற இலங்கை தொழில்நுட்ப சேவைக்குரிய நியமன அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளைப் பெற்றுள்ள தொழில்நுட்ப அலுவலர்களிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.இவ் அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு திணைக்களத் தலைவர் ஊடாக, செயலாளர், அரசாங்க சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை பொறியியல் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்த்தல் (மட்டுப்படுத்தப்பட்ட) - 2024" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2024.08.20 ஆகும். (இத்தினத்திற்குப் பிறகு கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பமும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.)

(ஆ) விண்ணப்பங்களை கோரும் இறுதித் திகதிக்கு பதவிக்கு இணைத்துக் கொள்வதற்கு தேவையான அனைத்து தகைமைகள் மற்றும் நிபந்தனைகளை சகல முறையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான கடிதமொன்று தபாலில் காணாமற் போனமை அல்லது தாமதம் குறித்துச் செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டா. இறுதித் திகதி வரை

விண்ணப்பப் படிவத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்களை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும். அவ்வாறே நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்வதானது, நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமையைப் பூர்த்திசெய்துள்ளதாகக் கருதப்படமாட்டாது.

மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் இலங்கை பொறியியல் சேவைக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதன் மூலம் பூர்த்திசெய்யப்பட வேண்டிய இலங்கை பொறியியல் சேவையின் III ஆம் தரத்திற்குரிய பதவிகளின் எண்ணிக்கை 37 ஆக உள்ளதுடன், அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகுதிகளின் கீழ் உள்ளடங்குகின்றன.

| வகுதி | வெற்றிடங்கள் எண்ணிக்கை |
|---|---|
| சிவில் வகுதி 01 | 07 |
| சிவில் 03 (நீர்ப்பாசன) வகுதி | 09 |
| சிவில் 04 (நீர்ப்பாசனமல்லாத) வகுதி | 01 |
| சிவில் வகுதி 05 | 01 |
| சிவில் வகுதி 06 | 05 |
| சிவில் வகுதி 07 | 06 |
| பொறிமுறை வகுதி 01 | 03 |
| பொறிமுறை வகுதி 02 | 02 |
| பொறிமுறை வகுதி 03 | 01 |
| மின் வகுதி 01 | 02 |
| **மொத்தம்** | **37** |

**1. சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

1.1 அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்ட புள்ளி வழங்கும் நடைமுறைகளுக்கு அமைய, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையின் மூலம் சேவைமூப்பு மற்றும் திறன் என்பன தொடர்பாக வழங்கப்படும் புள்ளிகளை அடிப்படையாக கொண்டு தேர்ந்தெடுக்கப்படும்.

1.2 அலுவலர் விண்ணப்பத்தை அனுப்பும் சந்தர்ப்பத்தில் பணியாற்றிய அமைச்சு/ மாகாண சபை/ உள்ளூராட்சி நிறுவனம் சார்ந்துள்ள வகுதி இலங்கை பொறியியல் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது ஏற்புடைய வகுதி கருதப்படும்.

1.3 மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் கீழ் நியமனக் கடிதம் ஒன்றின் மூலம் இலங்கை பொறியியல் சேவையின் III ஆந் தரத்திற்கு அலுவலர்கள் ஆட்சேர்க்கப்படும் போது, அவர்களது சேவை வகுதிகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1836/6 ஆம் இலக்க 2013.11.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பொறியியல் சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தீர்மானிக்கப்படும்.

1.4 நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி மற்றும் நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கையினர் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் தீர்மானிக்கப்படும்.நிலவுகின்ற வெற்றிடங்களின்சிறு தொகையினரை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரமுண்டு.

**2. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

2.1 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1836/ 6 ஆம் இலக்க 2013.11.11 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை பொறியியல் சேவைப் பிரமாண குறிப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள நியமங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பில் ஏற்கனவே செய்யப்பட்டுள்ள மற்றும் இதன் பின்னர் செய்யப்பட முடியுமான திருத்தங்களுக்கும் அரசாங்க சேவையின் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாக தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் இலங்கைப் பொறியியல் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

2.2 இப்பதவி நிரந்தரமானது.இந்நியமனம் ஓய்வூதியம் உரித்துடையது. மேலும், நீர் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் விதத்தில் நீர் அதற்கான பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

2.3 இப்பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் ஒருவருட (01) பதில் கடமை காலப் பகுதிக்கு உட்படுத்தப்படுவர்

2.4 எனினும், மூன்று (03) வருடங்களுக்குள் முதலாவது வினைத்திறன் காண் தடைத் தாண்டல் பரீட்சையில் சித்தி பெறுதல் வேண்டும்.

2.5 இப்பதவியைப் பொறுப்பேற்ற திகதியில் இருந்து மூன்று (03) வருடங்கள் பூர்த்தியடைய முன்னர் அரசாங்க கொள்கைகளுக்கு இணங்க அரசகரும மொழித் தேர்ச்சியை பெற்றுக் கொண்டமை பற்றி நீர் உறுதிப்படுத்துதல் வேண்டும். நீர் இப்பதவிக்கான தகைமைகளை சிங்கள மொழியூடாகப் பெற்றிருப்பின், உமது மற்றைய அரசகரும மொழி தமிழ் மொழி ஆகும். அவ்வாறே நீர் இந்நியமனத்திற்கான தகைமைகளை தமிழ் மொழியூடாகப் பெற்றிருப்பின், உமது மற்றைய அரசகரும மொழி சிங்கள மொழி ஆகும். 2020.10.16 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் அதன் இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளும் இதற்கு ஏற்புடையதாகும்.

2.6 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் பிற கட்டளைகளுக்கும் இப்பதவி உட்பட்டதாகும்.

2.7 நியமனம் பெறுபவர்கள், நாட்டினுள் பணிப்புரை வழங்கப்படும் எந்தவொரு பிரதேசத்திலும் கடமைக்குச் சமுகமளித்தல் வேண்டும்.

2.8 நியமனம் பெறுபவர்கள், அரசாங்க சேவையைப் போன்றே மாகாண அரசாங்க சேவையிலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டவர்களாவர்.

**3. சம்பளத் திட்டம் :**

03/2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் SL-1-2016 ஆம் இலக்க வகுதிக்கு இணங்க இப்பதவிக்கு ரூபா 47,615 - 10×1,335 - 8× 1,630 -17 × 2170- ரூபா 110,895.00 மாதாந்த சம்பளத் திட்டம் உரித்தாகும்.

**4. தகைமைகள் :**

தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்று வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று, விண்ணப்பித்த வகுதிக்கமைய பின்வரும் அடிப்படைத் தகைமைகளுள் ஏதேனுமொரு தகைமையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்பதுடன், இங்கு 4.2 பிரிவின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளையும், நியமங்களையும் பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

4.1. **அடிப்படைத் தகைமைகள்**

கீழ்வரும் (I), (II), (III), (IV) மற்றும் (V) பிரிவுகளின் கீழ் தகைமைகளில் ஒன்றுடன் 2017 ஆம் ஆண்டு 04 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட இலங்கை பொறியியலாளர் சபையில் அல்லது அதனோடு தொடர்புடைய பொறியியலாளராக பதிவு செய்திருத்தல்.

I. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையைச் சேர்ந்த அலுவலரொருவராக 15 ஆண்டுகளை விடக் குறையாத சேவைக் காலத்துடன், அதில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகள் I ஆம் தரத்திற்கு பதவியுயர்வு பெற்று சேவையாற்றியிருத்தல் மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் சிரேஷ்ட தொழில்நுட்ப பரீட்சையில் முழுமையாக சித்தியெய்தியிருத்தல்.

II. புகையிரதத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவப் பதவியொன்றில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள், அத்திணைக்களத்தில் 15 ஆண்டுகளை விடக் குறையாத சேவைக் காலத்துடன், அதில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகள் I ஆம் தரத்திற்கு பதவியுயர்வு பெற்று சேவையாற்றியிருத்தல்.

III. இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலரொருவராக 15 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக் காலத்துடன், அதில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகள் அச்சேவையில் I ஆம் தரத்திற்குப் பதவியுயர்வு பெற்று பணியாற்றியிருத்தல் மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் அரசாங்க தொழில்நுட்ப அலுவலர்கள் தொடர்பான மூன்றாவது பரீட்சையில் (1979 பிரமாணக் குறிப்பு) முழுமையாக சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

IV. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவைக்குரிய பொறியியல் உதவியாளரொருவராக அல்லது இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தராக அல்லது புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ பதவியொன்றை வகிக்கும் அலுவலரொருவராக 21 ஆண்டுகளுக்குக் குறையாத செயற்திறனான மற்றும் மகிழ்ச்சியான சேவைக் காலத்துடன் அச்சேவையில் விசேட தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டிருத்தல்.

V. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவைக்குரிய பொறியியல் உதவியாளரொருவராக அல்லது இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தராக அல்லது புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ பதவியொன்றை வகிக்கும் அலுவலரொருவராக 15 ஆண்டுகளுக்குக் குறையாத செயற்திறனான மற்றும் மகிழ்ச்சியான சேவைக் காலத்துடன் பூர்த்தி செய்திருத்தல்.

மற்றும்

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து, அவ் ஆணைக்குழுவினாலும் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு செய்யப்படும் பாடத் திட்டத்தின் கீழ் 04 ஆண்டு கால முழுநேர பொறியியல் விஞ்ஞானமானி பாடநெறியை சிறப்பாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ஆ) V (அ) இல் குறிப்பிடப்படடுள்ள பட்டப் பாடநெறிக்குச் சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை மற்றும் ஏனைய அனைத்து தேவைகளையும் ஆட்சேர்ப்பு செய்யப்படும் பாடத்திட்டத்தின் கீழ் பூர்த்தி செய்து, அதற்குரிய செல்லுபடியாகும் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

4.2. **நிபந்தனைகள் மற்றும் நியமங்கள் :**

4.2.1. விண்ணப்பங்கள் அனுப்பப்படும் சந்தர்ப்பத்தில், அலுவலர் அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில், பணியாற்றுபவராக இருத்தல் வேண்டும்.

4.2.2. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுகின்ற இந்நியமனம் அமுல் படுத்தப்படும் திகதியில் எந்தவொரு அலுவலரும் அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் இருந்து ஓய்வுபெற நடவடிக்கை எடுத்திருக்கக் கூடாது.

4.2.3. நீர்ப்பாசனத் திணைக்களத்தில், வெற்றிடமாவுள்ள இலங்கை பொறியியல் சேவையின் III ஆம் தரம் பதவி தொடர்பாக விண்ணப்பிக்கும் போது அத்திணைக்களத்தில் பொறியியல் உதவியாளராக தொடர்ச்சியான சேவையில் ஈடுபட்டிருப்பது கட்டாயமானதாகும்.

4.2.4. புகையிரத திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள இலங்கை பொறியியல் சேவையின் III ஆம் தரத்தைச் சேர்ந்த பதவிகள் தொடர்பாக விண்ணப்பிக்கும் போது அத்திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ பதவியொன்றை வகிக்கும் அலுவலராக தொடர்ச்சியான சேவையில் ஈடுபட்டிருப்பது இன்றியமையாததாகும்.

4.2.5. விண்ணப்பங்கள் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு இணங்கியதாகக் காணப்பட வேண்டும் என்பதுடன் அது கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி A4 அளவு கடதாசியொன்றில் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்ப இல. 1 இலிருந்து 10 வரை முதலாம் பக்கமும், இல. 11 இலிருந்து 22 வரை இரண்டாம் பக்கமும், இல. 23 இலிருந்து 25 இல் (ii) வரை மூன்றாம் பக்கமும், இல. 25 இல் (iii) இலிருந்து 26 வரை நான்காம் பக்கமும், 26 இல் (iii) இலிருந்து திணைக்கள தலைவரின் பரிந்துரை வரை ஐந்தாம் பக்கம் வரையிலும் விண்ணப்பம் தயாரிக்கப்படுதல் வேண்டும். உரித்தான ஒவ்வொரு மாதிரிப் படிவமும் A4 அளவில் கடதாசியின் ஒரு பக்கம் மட்டும் பயன்படுத்தி தயாரித்தல் வேண்டும். முழு விண்ணப்பமும் விண்ணப்பதாரரின் கையெழுத்தில் அல்லது அச்சிடப்பட்ட வெற்று விண்ணப்பமொன்றில் கோரப்பட்டுள்ள தகவல்களை விண்ணப்பதாரரின் கையெழுத்தில் பூர்த்திசெய்தல் வேண்டும்.

4.2.6 விண்ணப்பங்கள் கிடைத்ததாக அறிவிக்கப்படமாட்டாது.

4.2.7 மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணக்கமாக அமையாத விண்ணப்பங்களும் முழுமையற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமைய முடியும்.) பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பங்கள் இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்பத்துக்கு இணக்கமானவையாக உள்ளனவா என்பதை விண்ணப்பதாரிகள் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்பட முடியும்.

**5. உடற் தகைமைகள் :**

எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரியதான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா விதத்திலும் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**6. ஏனைய தகைமைகள் :**

6.1. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்கச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அதில் செய்யப்படும் திருத்தங்களுக்கு இணங்க ஒழுக்காற்றுத் தண்டனை வழங்கப்பெற்றவராக இருத்தல் கூடாது.

6.2. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில், பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனைத்து தகைமைகளையும் நிபந்தனைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7. புள்ளி வழங்கும் நடைமுறை (நேர்முகப் பரீட்சையில் வழங்கப்படுகின்ற மொத்த புள்ளிகளின் எண்ணிக்கை 100 ஆகும்.)

| தொடர் இலக்கம் | பாடம் |
|---|---|
| 01 | **சேவைக்கால அனுபவம் (அதிகபட்சமாக 60 புள்ளிகள்)**<br>தகைமையுடைய, கனதியிடப்பட்ட சேவைக் கால அனுபவம் கூடிய விண்ணப்பதாரிக்கு 60 புள்ளிகள் வழங்கப்பட்டு, ஏனைய விண்ணப்பதாரிகளுக்கு அவர்களது கனதியிடப்பட்ட சேவைக்கால அனுபவத்திற்கு விகிதசமமாக குறைந்து செல்லும் வகையில் புள்ளிகள் வழங்கப்படும்.<br>சேவை அனுபவதுக்குப் புள்ளிகள் வழங்கும் போது சேவைக் கால அனுபவத்திற்கான அடிப்படைத் தகைமைகளை (கட்டாயச் சேவைக் காலத்தை) பூர்த்திசெய்த திகதியிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி வரையான காலம் அடிப்படையாகக் கொள்ளப்படும்.<br>[கனதியிடப்பட்ட சேவைக் கால அனுபவம் = வகுப்பு I இல் செயலூக்கமான சேவைக் காலம் + (விசேட வகுப்பில் செயலூக்கமான சேவைக் காலம் x 1.25)] |
| 02 | **தொழில்நுட்ப அறிவு (அதிகபட்சமாக 20 புள்ளிகள்)**<br>நேர்முகப் பரீட்சை சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள சிவில், பொறிமுறை மற்றும் மின் பொறியியல் துறைகளில் விசேட அறிவுள்ள அலுவலர்களினால் நடாத்தப்படும் வாய் மொழிமூலப் பரீட்சையில், குறித்த துறைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளின் பிரயோக மற்றும் கோட்பாடு ரீதியான அறிவினை ஆராய்ந்து, பிரயோக ரீதியான அறிவு தொடர்பாக 10 புள்ளிகளும், கோட்பாடு ரீதியான அறிவு தொடர்பாக 10 புள்ளிகளுமாக அதிகபட்சமாக 20 புள்ளிகள் வழங்கப்படும். |

| தொடர் இலக்கம் | பாடம் |
|---|---|
| 03 | **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் (அதிகபட்சமாக 10 புள்ளிகள்)**<br>**கணினி அறிவு (அதிகபட்சமாக 05 புள்ளிகள்)**<br>ஆறு (06) மாத காலத்திற்குக் குறையாத பாடநெறிக் காலத்துடன் அரசாங்கத்தினால் அங்கீகாரமளிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்போளா பாடநெறியை சிறப்பாகப் பூர்த்தி செய்திருப்பின் அதிகபட்சமாக 05 புள்ளிகள் வழங்கப்படும்.<br>03 மாதங்களுக்கு குறையாத பாடநெறிக் காலத்தைக் கொண்ட அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் தொழில்நுட்பச் சான்றிதழ் பாடநெறியொன்றை அல்லது டிப்ளோமா வொன்றை சிறப்பாகப் பூர்த்தி செய்திருப்பின் 03 புள்ளிகள் வழங்கப்படும்.<br>(அதிகபட்சமாக ஒரு தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். ஒரு அலுவலர் 02 சான்றிதழ் பாடநெறிகளை அல்லது அதற்கு கூடியவைகளை சமர்ப்பித்திருப்பின் உயர் தகைமையுடன் கூடிய ஒரு சான்றிதழுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) |
| | **ஆங்கில மொழித்தேர்ச்சி (அதிகபட்சமாக 05 புள்ளிகள்)**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி டிப்ளோமாவொன்றைப் சிறப்பாகப் பூர்த்தி செய்திருப்பின் அதிகபட்சமாக 05 புள்ளிகள் வழங்கப்படும்.<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறியொன்றைச் சிறப்பாகப் பூர்த்தி செய்திருப்பின் அதிகபட்சமாக 03 புள்ளிகள் வழங்கப்படும்.<br>(அதிகபட்சமாக ஒரு தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். ஒரு அலுவலர் 02 சான்றிதழ்களை அல்லது அதற்கு கூடியவைகளை சமர்ப்பித்திருப்பின் அதியுயர் சான்றித ழொன்றுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) |
| 04 | சேவைக்கால அறிக்கை (அதிகபட்சமாக 05 புள்ளிகள்)<br>(a) செயலாற்றுகை (அதிகபட்சமாக 03 புள்ளிகள்)<br>உடன் முன்னரான 03 வருட கால செயலாற்றுகைக்குப் புள்ளிகள் வழங்கப்படும்.<br>"மிக நன்று" என குறிப்பிடப்பட்டிருப்பின் ஒரு வருடத்துக்கு - 01 புள்ளி வீதம்<br>"நன்று" என குறிப்பிடப்பட்டிருப்பின் ஒரு வருடத்துக்கு - 0.5 புள்ளி வீதம்<br>(b) பாராட்டு (அதிகபட்சமாக 02 புள்ளிகள்)<br>விண்ணப்பதாரி பெற்றுள்ள பாராட்டுக்களுக்கு ஒரு பாரட்டுக்கு 01 புள்ளி வீதம் அதிகபட்சமாக 02 புள்ளிகள் வழங்கப்படும். (பொது 230 படிவத்தின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும். தகைமைகளைப் பூர்த்தி செய்யும் திகதிக்கு முன்னர் பெற்றுள்ள பாராட்டுகளுக்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும்). |
| 05 | **நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறன்கள் (அதிகபட்சமாக 05 புள்ளிகள்)** |

**கவனத்தில் கொள்க.-**

- விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சையின் போது உரிய சான்றிதழ்களையும் ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் அவ் ஆவணங்கள்/ சான்றிதழ்கள் எல்லா விதத்திலும் செல்லுபடியானவையாக இருத்தல் வேண்டும். உரிய அதிகாரியின் காப்பு ஒப்புதலுக்கு உட்பட்ட வகையில் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு ஆவணமும்/சான்றிதழும் செல்லுபடியாகாது.
- விண்ணப்பதாரிகள் பலர் சம அளவிலான புள்ளிகளைப் பெறுவார்களாயின், அத்தகைய சந்தர்ப்பங்களில் பொருத்தமான தீர்மானமொன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் என்பதுடன், அது இறுதித் தீர்மானமாக அமையும்.
- அவ்வாறே நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்வதானது, நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளமையாகக் கருதப்படமாட்டாது.

**8. ஆளடையாளம் :**

ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்:

- தேசிய ஆளடையாள அட்டை;
- செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
- செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

9. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகள், காலத்துக்குக் காலம் அரசாங்க சேவை தொடர்பில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் இலங்கை பொறியியல் சேவைப் பிரமாண குறிப்பு மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களிலுள்ள நிபந்தனைகள் ஆகியன இப்பதவிக்கு ஏற்புடையனவாகும்.

10. இங்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டராத விடயங்கள் தொடர்பாக தீர்மானங்கள் எடுப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரமுண்டு.

11. இவ் அறிவித்தலின் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைப் பகுதிகளுக்கு இடையில் ஏதேனும் இணக்கப் பாடின்மைகள் ஏற்படுமாயின், அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான உரை பயன்வலுப் பெற வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

ஜே. ஜே. ரத்னசிரி,
செயலாளர்,
அரசாங்க சேவை, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

அரசாங்க சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2024, யூலை மாதம் 15 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலகப் பயன்பாட்டுக்காக மட்டும்

**இலங்கைப் பொறியியலாளர் சேவையின் தரம் III இற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2024**

LIMITED RECRUITMENT OF ENGINEERS TO THE GRADE III OF THE SRI LANKA ENGINEERING SERVICE – 2024

1) விண்ணப்பிக்கும் வகுதி : ......................................................
(ஒரு உத்தியோகத்தர் ஒரு வகுதிக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்)

2) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்):
(உதாரணம்: HERATH MUDIYANSELAGESAMAN KUMARA GUNAWARDHANA)
......................................................
......................................................

3) இறுதியில் வரும் பெயரை முதலிலும், ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை இறுதியிலும் இட்டு பெயர்:
(உதாரணம்: GUNAWARDHANA, H.M.S.K.)
......................................................

4) முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :
......................................................
......................................................

5) நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :
......................................................
......................................................

6) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :
......................................................
......................................................

7) தொலைபேசி இலக்கம் : நிலையான ...................................... கைத்தொலைபேசி: ......................................

8) மின்னஞ்சல் முகவரி : ......................................................

9) பாலினம் : ......................................................

10) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ......................................................

11) விவாகமானவர்/விவாகமாகாதவர் : ......................................................

12) பிறந்த திகதி : ஆண்டு .................. மாதம் ........................... திகதி ...........................

13) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் (2024.08.20) வயது: வருடங்கள் ................................. மாதங்கள் ...................................... நாட்கள் .............

14) பொறியியல் துறை (சிவில்/பொறிமுறை/மின் ) : ...........................................

15) தற்போதுள்ள சேவையாற்றும் நிலையம் (அமைச்சு/ திணைக்களம்/ மாகாண சபை/ உள்ளூராட்சி நிறுவனம்) (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ......................................................

16) அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ......................................................

17) அலுவலக தொலைபேசி இலக்கம் :........................................ தந்தி : ...................................................... .............. மின்னஞ்சல் முகவரி :......................................................

18) நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளராக/ இலங்கை தொழில்நுட்ப சேவை தொழில்நுட்ப உத்தியோகத்தராக (முன்னர் மத்திய மட்ட இணைந்த தொழில்நுட்ப சேவை) புகையிரதத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக அரசாங்க சேவையில் இணைந்த திகதி:.......................................

19) நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளராக/ இலங்கை தொழில்நுட்ப சேவை தொழில்நுட்ப உத்தியோகத்தராக (முன்னர் மத்திய மட்ட இணைந்த தொழில்நுட்ப சேவை) புகையிரதத் திணைக்களத்தின் மேற்பார்வை சேவை உத்தியோகத்தராக அரசாங்க சேவையில் பதவி நிரந்தரமாக்கப்பட்ட திகதி:.......................................

20) இலங்கை தொழில்நுட்ப சேவை தொழில்நுட்ப உத்தியோகத்தராக (முன்னர் மத்திய மட்ட இணைந்த தொழில்நுட்ப சேவை) உத்தியோகத்தராக அரசாங்க சேவையில் இணைந்த நிலையம் (அமைச்சு/திணைக்களம்/மாகாண சபை/ உள்ளூராட்சி நிறுவனம்)

21) தற்போதுள்ள சேவை: ......................................................

22) தற்போதுள்ள வகுப்பு/தரம் : ......................................................

23) ஒவ்வொரு வகுப்பிற்கும்/ தரத்திற்கும் நியமனம் பெற்ற/ தரமுயர்வு பெற்ற/ உள்வாங்கப்பட்ட திகதிகளுடன் சேவையாற்றிய காலப் பகுதிகள் ஒழுங்கு முறைப்படி (சம்பளமற்ற லீவுகள் பெற்றிருப்பின் அவற்றையும் உள்ளடக்குதல் வேண்டும்) :

| சேவையின் பெயர் | வகுப்பு/தரம் | கால எல்லை | *சேவைக் காலம் | சம்பளமற்ற லீவுகள் | சம்பளமற்ற லீவுகளை குறைத்ததன் பின்னரான சேவைக்காலம் |
|---|---|---|---|---|---|
| | | ....... ஆந் திகதி முதல் ...........ஆந் திகதி வரை | ஆ மா தி | ....... ஆந் திகதி முதல் ........... ஆந் திகதி வரை | ஆ மா தி |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

* விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி வரை
(குறித்த ஆவணங்கள் உண்மையான பிரதிகள் என்று உறுதிப்படுத்தி இணைத்து அனுப்புதல் வேண்டும்)

24) i. விண்ணப்பம் அழைக்கப்படும் இறுதித் தினத்திற்கு 2017 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட பொறியியலாளர்களின் சபையில் தொடர்புடைய பொறியியலாளராக செல்லுபடியான பதிவினை பெற்றுள்ளரா? ......................................................

ii. பெற்றுள்ளாரொனில் உறுப்பினர் இலக்கம்: ......................................................

25) 1836/6 ஆம் இலக்க 2013.11.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை பொறியியல் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.3.1.2 ஆம் பிரிவுக்கு இணங்க ஆகக் குறைந்த தகைமைகளைப் பூர்த்தி செய்தவு (உரிய கூட்டினுள் ✖ அடையாளம் இடவும். சம்பள விருத்தி/ செயலாற்றுகை/ விளைவு ஆவணங்கள்/ பட்டங்களின் சான்றிதழ்கள்/ விளைவுகளின் விபரணங்கள் ஆகிய ஆவணங்களை உண்மை பிரதிகள் என சான்றுரைப்படுத்தி இணைத்து அனுப்புதல் வேண்டும்) :

i. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையைச் சேர்ந்த அலுவலரொருவராக 15 ஆண்டுகளை விடக் குறையாத சேவைக் காலத்துடன், அதில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகள் I ஆம் தரத்திற்கு பதவியுயர்வு பெற்று சேவையாற்றியிருத்தல் மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் சிரேஷ்ட தொழில்நுட்ப பரீட்சையில் முழுமையாக சித்தியெய்தியிருத்தல்.

சிரேஷ்ட தொழில்நுட்பப் பரீட்சையில் முழுமையாகச் சித்தியடைந்த திகதி : ................................

மாதிரிப்படிவ இலக்கம் 01 ஐப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

ii. புகையிரதத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவப் பதவியொன்றில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள், அத்திணைக்களத்தில் 15 ஆண்டுகளை விடக் குறையாத சேவைக் காலத்துடன், அதில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகள் I ஆம் தரத்திற்கு பதவியுயர்வு பெற்று சேவையாற்றியிருத்தல்.

iii. இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலரொருவராக 15 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக் காலத்துடன், அதில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகள் அச்சேவையில் I ஆம் தரத்திற்குப் பதவியுயர்வு பெற்று பணியாற்றியிருத்தல் மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் அரசாங்க தொழில்நுட்ப அலுவலர்களுக்கான மூன்றாவது பரீட்சையில் (1979 பிரமாணக் குறிப்பு) முழுமையாக சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

| பரீட்சை (1979 பிரமாணக் குறிப்பு) | துறை (சிவில்/ பொறிமுறை) | தகைமைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்த திகதி ** |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சை | | |
| 2 ஆம் பரீட்சை | | |
| 3 ஆம் பரீட்சை | | |

** மாதிரிப் படிவங்கள் 02, 03, 04 /மாதிரி படிவங்கள் 05 ஐப் பூர்த்தி செய்ய வேண்டும்.

iv. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவைக்குரிய பொறியியல் உதவியாளரொருவராக அல்லது இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தராகஅல்லது புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ பதவியொன்றை வகிக்கும் அலுவலரொருவராக 15 ஆண்டுகளுக்குக் குறையாத செயற்திறனான மற்றும் மகிழ்ச்சியான சேவைக் காலத்துடன் விசேட தரத்திற்கு உயர்த்தப்பட்டிருத்தல்.

v. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவைக்குரிய பொறியியல் உதவியாளரொருவராகஅல்லது இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தராகஅல்லது புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ பதவியொன்றை வகிக்கும் அலுவலரொருவராக 15 ஆண்டுகளுக்குக் குறையாத செயற்திறனான மற்றும் மகிழ்ச்சியான சேவைக் காலத்துடன் பூர்த்தி செய்திருத்தல் மற்றும்

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து, அவ் ஆணைக்குழுவினாலும் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு செய்யப்படும் பாடத் திட்டத்தின் கீழ் 04 ஆண்டுகால பொறியியல் விஞ்ஞானமானி பாடநெறியை சிறப்பாகப் பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

(ஆ) V (அ) இல்குறிப்பிடப்படடுள்ள் பட்டப் பாடநெறிக்குச் சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை மற்றும் ஏனைய அனைத்து தேவைகளையும் ஆட்சேர்ப்பு செய்யப்படும் பாடத்திட்டத்தின் கீழ் பூர்த்தி செய்து, அதற்குரிய செல்லுபடியாகும் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

26) **விண்ணப்பதாரரின் திருப்திகரமான சேவைக் காலம்:**

i. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில்01/2020 ஆம் இலக்க அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கையின்படி ஒழுக்காற்றுத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதா தொடர்பில்: ..............................................

ii. மேற்கூறப்பட்ட 1 இன் பதில் ஆம் எனின் உரிய ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும்.

iii. உமது சேவைக் காலத்தினுள் ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்குக் உட்படுத்தப்பட்டிருப்பின், அந்தத் தவறின் தன்மை, வழங்கியுள்ள தண்டனை, தண்டனை வழங்கிய திகதி என்பவற்றைக் குறிப்பிடவும் :.............................

27)

i. கடந்த ஐந்து வருட காலத்தில் சம்பள ஏற்றங்களைப் பெற்றுள்ளீரா :...............................

ii. கடந்த ஐந்து வருட காலத்தில்செயலாற்றுகை மகிழ்ச்சிகரமாக அல்லது அதற்கு மேல் மட்டத்தில் காணப்பட்டதா? (மேற்கூறப்பட்ட சம்பள ஏற்றங்கள் மற்றும் செயலாற்றுகைகளின் சான்றுரைப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்)

**விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இந்த விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும், சரியானவை என்றும், இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு விடயம் பொய்யானது மற்றும் பிழையானது என்று நியமனம் வழங்கப்படுவதற்கு முன்னர் தெரிய வருமாயின் நான் இப்பதவிக்குத் தகுதியற்றவனாவேன் என்றும், நியமிக்கப்பட்டதன் பின்னர் தெரிய வருமாயின் நட்டஈடுகள் எதுவுமின்றி நியமனம் இரத்துச் செய்யப்பட முடியும் என்றும் நான் அறிவேன்.

திகதி : ..........................  ..................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

**திணைக்களத் தலைவரின் பரிந்துரை**

தற்போது இத்திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவை உத்தியோகத்தர்/புகையிரதத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்/இலங்கை தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர் (முன்னர் மத்திய மட்ட இணைந்த கைத்தொழில் தொழில்நுட்பச் சேவை) திரு./திருமதி/செல்வி ........................................................................................................ இலங்கை பொறியியலாளர் சேவையின் தரம் III இற்குரிய பதவியொன்றுக்கு நியமிக்கப்படுவதற்கு தகைமை பெற்றுள்ளதுடன், அந்த உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த விண்ணப்பத்தை பொருத்தமான நடவடிக்கைகளுக்காகச் சமர்ப்பிக்கிறேன். மேலும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது/ ஆரம்பிக்கப்படவில்லை என்றும், எதிர்காலத்தில் அவ்வாறான நடவடிக்கை எடுப்பதற்கான விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன/ முன்வைக்கப்படவில்லை என்றும் உறுதிப்படுத்துகிறேன். (தேவையற்ற சொற்களை வெட்டி விடவும்)

விண்ணப்பப்படிவம் முறையாக உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட திகதி:....................................................

திகதி : ......................................  ........................................................................................

கையொப்பம் மற்றும் பதவி முத்திரை

(செயலாளர்/முதன்மைச் செயலாளர்/திணைக்களத் தலைவர்)

மாதிரிப்படிவம் 01

**சிரேஷ்ட தொழில்நுட்பப் பரீட்சை**

**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**

பெயர் : ...................................................................................................................

**செயன்முறைப் பரீட்சை**

| பாடம் | | புள்ளிகள் | | | |
|---|---|---|---|---|---|
| | | வருடம் ................ | வருடம் ................ | வருடம் ................ | வருடம் ................ |
| I **ஆம் பாகம்** | | | | | |
| I ஆம் வகுதி | மட்டம் எடுத்தல் செயன்முறைப் பரீட்சை) (>50%) | | | | |
| II ஆம் வகுதி | அளவைகள் (நில அளவை) செயன்முறைப் பரீட்சை) (>50%) | | | | |

**எழுத்துப் பரீட்சை**

| பாடம் | | புள்ளிகள் | | | |
|---|---|---|---|---|---|
| | | வருடம் ................ | வருடம் ................ | வருடம் ................ | வருடம் ................ |
| I **ஆம் பாகம்** | | | | | |
| III ஆம் வகுதி | (அ) கட்டமைப்புக் கோட்பாடு (கட்டமைப்பு மற்றும் பொருட்களின் தொடர்பான கோட்பாடுகள்) | | | | |
| | (ஆ) திரவவியல் | | | | |
| II ஆம் வகுதி | அளவைகள் (நில அளவை) செயன்முறைப் பரீட்சை) (>50%) | | | | |
| II **ஆம் பாகம்** | | | | | |
| I ஆம் வகுதி | (அ) வடிவமைப்பு, வரைதல் மற்றும் நியம விபரக் குறிப்பு | | | | |
| | (ஆ) நீர்ப்பாசன | | | | |
| II ஆம் வகுதி | (அ) அளவு (அளவு மதிப்பீடு) | | | | |
| | (ஆ) தாபனவிதிக் கோவை, நிதிப் பிரமாணங்கள் மற்றும் திணைக்கள் ஏற்பாடுகள் | | | | |

**எழுத்துப் பரீட்சைக்கான ஆகக் குறைந்த புள்ளி மட்டம் 40%**

**எழுத்துப் பரீட்சைகளின் சராசரிப் புள்ளி (>50%) :................................**

குறிப்பு: I ஆம் பாகத்தின் I ஆம் வகுதி மற்றும் IIஆம் வகுதியில் சித்தியடைவதற்கு பரீட்சார்த்திகள் ஒவ்வொரு வகுதியிலும் ஆகக் குறைந்தது 50% பெற வேண்டும். மற்றைய எந்தவொரு வகுதியிலும் ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40% பெறுவதன் மூலம் அப்பாடங்களில் சித்தியடைய முடிமாயினும், பரீட்சையில் சித்தியடைவதற்கு அனைத்து எழுத்துப் பரீட்சை வினாத்தாள்களுக்கு 50% இற்கு குறையாத சராசரிப் புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

04 இற்கு மேற்படாத தடவைகளில் அனைத்து வகுதியிலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சித்தியடைவதன் மூலம் சிரேஷ்ட தொழில்நுட்பப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

மேற்குறித்த தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும், சரியானவை என்றும், இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி : ..........................  ..................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

மாதிரிப்படிவம் 02

**அரசாங்க சேவை தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் பரீட்சைகள் (சிவில்/பொறிமுறை)**

**1979 பிரமாணக் குறிப்பு - இலங்கை பரீட்சைத் திணைக்களம்**

பெயர் : ...................................................................................................................

1 ஆம் பரீட்சை (சிவில்)

கட்டாய பாடங்கள்

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ |
| எழுத்துப் பரீட்சை | | | | | | | |
| அளவைச் செயன்முறை | | | | | | | |
| மட்டம் எடுத்தல் செயன்முறை | | | | | | | |
| அளவை மற்றும் மட்டம் எடுத்தல் (கீழ் பரீட்சைத் தாள்) | 03 | | | | | | |

பரீட்சையில் சித்தியடைவதற்கான சராசரிப் புள்ளிகள் :....................

(அளவை மற்றும் மட்டம் எடுத்தல் பாடத்தில் திறமைச் சித்தியைத் தீர்மானிக்கும் போது, மேலே குறிப்பிட்ட 03 பகுதிகளில் ஒவ்வொரு பகுதிக்கும் ஆகக் குறைந்தது 35% புள்ளிகளை பெற்றிருக்க வேண்டும் என்பதுடன் முழுப் பாடத்திலும் சித்தியடைவதற்கு 03 பகுதிகளிலும் 40% சராசரிப் புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்).

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ |
| கணிதம் (கீழ் பரீட்சைத் தாள்) | 01 | | | | | | |
| கனிய அளவையியல் (கீழ் பரீட்சைத் தாள்) | 02 | | | | | | |
| வரைபடம் வரைதல் மற்றும் பிரதியெடுத்தல் | 04 | | | | | | |

**விருப்பத் தெரிவுப் பாடங்கள்: பின்வரும் பாடங்களில் இரண்டில் சித்தியடைய வேண்டும்.**

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ |
| அடிப்படை கட்டட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு | 05 | | | | | | |
| நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு | 06 | | | | | | |
| வேலைத் தள நிர்வாகம் | 07 | | | | | | |
| வீதிகள் அமைத்தல் மற்றும் பராமரிப்பு | 08 | | | | | | |

பரீட்சையில் சித்தியடைவதற்கான சராசரிப் புள்ளிகள் :....................

(முழுப் பரீட்சையிலும் சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற வேண்டும் என்பதுடன் அனைத்துப் பாடங்களிலும் பெறுகின்ற புள்ளிகளின் கூட்டுத் தொகையின் சராசரி 45% ஆகக் காணப்பட வேண்டும்.)

மேற்குறித்த தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும், சரியானவை என்றும், இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி : ..........................  ..................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

மாதிரிப்படிவம் 03

**2 ஆம் பரீட்சை (சிவில்)**

**கட்டாய பாடங்கள்**

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ |
| எழுத்துப் பரீட்சை | | | | | | | |
| அளவைச் செயன்முறை | | | | | | | |
| மட்டம் எடுத்தல் செயன்முறை | | | | | | | |
| அளவை மற்றும் மட்டம் எடுத்தல் | 23 | | | | | | |

பரீட்சையில் சித்தியடைவதற்கான சராசரிப் புள்ளிகள் :....................

(அளவை மற்றும் மட்டம் எடுத்தல் பாடத்தில் திறமைச் சித்தியைத் தீர்மானிக்கும் போது, மேலே குறிப்பிட்ட 03 பகுதிகளில் ஒவ்வொரு பகுதிக்கும் ஆகக் குறைந்தது 35% புள்ளிகளை பெற்றிருக்க வேண்டும் என்பதுடன் முழுப் பாடத்திலும் சித்தியடைவதற்கு 03 பகுதிகளிலும் 40% சராசரிப் புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்).

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ |
| கணிதம் (உயர் பரீட்சைத் தாள்) | 21 | | | | | | |
| அளவு எடுத்தல் (உயர் பரீட்சைத் தாள்) | 22 | | | | | | |
| வரைதல் | 24 | | | | | | |

**விருப்பத் தெரிவுப் பாடங்கள்: பின்வரும் பாடங்களில் மூன்றில் சித்தியடைய வேண்டும்.**

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ | ஆண்டு ............ |
| கட்டடங்கள் நிர்மாணித்தல் (உயர் பரீட்சைத் தாள்) | 25 | | | | | | |
| நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு | 26 | | | | | | |
| வீதிகள் அமைத்தல் மற்றும் பராமரிப்பு | 27 | | | | | | |
| பாலம் மற்றும் பாரி மாதிரியுருக்கள் நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பு | 28 | | | | | | |
| வேலை ஒழுங்கமைப்பு | 29 | | | | | | |

பரீட்சையில் சித்தியடைவதற்கான சராசரிப் புள்ளிகள் :....................

(முழுப் பரீட்சையிலும் சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற வேண்டும் என்பதுடன் அனைத்துப் பாடங்களிலும் பெறுகின்ற புள்ளிகளின் கூட்டுத் தொகையின் சராசரி 45% ஆகக் காணப்பட வேண்டும்.)

மேற்குறித்த தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும், சரியானவை என்றும், இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி : ..........................  ..................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

மாதிரிப்படிவம் 04

**3 ஆம் பரீட்சை (சிவில்)**

கட்டாய பாடங்கள்

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... |
| எழுத்துப் பரீட்சை | | | | | | | |
| அளவைச் செயன்முறை | | | | | | | |
| மட்டம் எடுத்தல் செயன்முறை | | | | | | | |
| அளவை மற்றும் மட்டம் எடுத்தல் | 48 | | | | | | |

பரீட்சையில் சித்தியடைவதற்கான சராசரிப் புள்ளிகள் :....................

(அளவை மற்றும் மட்டம் எடுத்தல் பாடத்தில் திறமைச் சித்தியைத் தீர்மானிக்கும் போது, மேலே குறிப்பிட்ட 03 பகுதிகளில் ஒவ்வொரு பகுதிக்கும் ஆகக் குறைந்தது 35% புள்ளிகளை பெற்றிருக்க வேண்டும் என்பதுடன் முழுப் பாடத்திலும் சித்தியடைவதற்கு 03 பகுதிகளிலும் 40% சராசரிப் புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்).

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... |
| சிவில் பொறியியல் i | 41 | | | | | | |
| சிவில் பொறியியல் iii | 44 | | | | | | |
| சிவில் பொறியியல் iv | 45 | | | | | | |
| கட்டட அளவுகள் எடுத்தல் மற்றும் கட்டட மதிப்பீடுகள் எடுத்தல் | 46 | | | | | | |
| கட்டடக் கலை வரைதல் | 47 | | | | | | |

**விருப்பத் தெரிவுப் பாடங்கள்: பின்வரும் பாடங்களில் ஒன்றில் சித்தியடைய வேண்டும்.**

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... |
| சிவில் பொறியியல் ii | 42 | | | | | | |
| வீதிகள் அமைத்தல் மற்றும் பராமரிப்பு | 43 | | | | | | |

பரீட்சையில் சித்தியடைவதற்கான சராசரிப் புள்ளிகள் :....................

(முழுப் பரீட்சையிலும் சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற வேண்டும் என்பதுடன் அனைத்துப் பாடங்களிலும் பெறுகின்ற புள்ளிகளின் கூட்டுத் தொகையின் சராசரி 45% ஆகக் காணப்பட வேண்டும்.)

மேற்குறித்த தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும், சரியானவை என்றும், இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி : ..........................

..................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

மாதிரிப்படிவம் 05

**அரசாங்க சேவை தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் பரீட்சைகள் (சிவில்/பொறிமுறை)**

**1979 பிரமாணக் குறிப்பு - இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

பெயர் : ..............................................................................................................................

**1 ஆம் பரீட்சை (பொறிமுறை)**

**அனைத்துப் பாடங்களும் கட்டாயமானவை**

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... |
| கணிதம் (கீழ் பரீட்சைத் தாள்) | 01 | | | | | | |
| பொறிமுறை அளவுகள் | 09 | | | | | | |
| பொறிமுறை வரைதல் மற்றும் பிரதி எடுத்தல் | 10 | | | | | | |
| வேலைத் தளப் பயிற்சி | 11 | | | | | | |
| பிரயோக வேலை (பொருத்துதல் வேலைத் தொழிற்சாலை) போன்றவை | 12 | | | | | | |
| அளவை மற்றும் மட்டம் எடுத்தல் (செயன்முறை) | 13 | | | | | | |

பரீட்சையில் சித்தியடைவதற்கான சராசரிப் புள்ளிகள் :....................

(முழுப் பரீட்சையிலும் சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற வேண்டும் என்பதுடன் அனைத்துப் பாடங்களிலும் பெறுகின்ற புள்ளிகளின் கூட்டுத் தொகையின் சராசரி 45% ஆகக் காணப்பட வேண்டும்.)

**2 ஆம் பரீட்சை (பொறிமுறை)**

**அனைத்துப் பாடங்களும் கட்டாயமானவை**

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... |
| கணிதம் (உயர் பரீட்சைத் தாள்) | 21 | | | | | | |
| பொறிமுறை அளவு எடுத்தல் (உயர் பரீட்சைத் தாள்) | 30 | | | | | | |
| பொறிமுறை வரைதல் மற்றும் பிரதி (உயர் பரீட்சைத் தாள்) | 31 | | | | | | |
| தொழிற்சாலை பயிற்சி | 32 | | | | | | |

பரீட்சையில் சித்தியடைவதற்கான சராசரிப் புள்ளிகள் :....................

(முழுப் பரீட்சையிலும் சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற வேண்டும் என்பதுடன் அனைத்துப் பாடங்களிலும் பெறுகின்ற புள்ளிகளின் கூட்டுத் தொகையின் சராசரி 45% ஆகக் காணப்பட வேண்டும்.)

**3 ஆம் பரீட்சை (பொறிமுறை)**

**அனைத்துப் பாடங்களும் கட்டாயமானவை**

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... | ஆண்டு ........... |
| பொறிமுறைப் பொறியியல் i | 49 | | | | | | |
| பொறிமுறை பொறியியல் ii | 50 | | | | | | |
| பொறிமுறை பொறியியல் iii | 51 | | | | | | |
| பொறியியல் பொருளியல் | 52 | | | | | | |
| பொறிமுறை பொறியியல் - வரைதல் | 53 | | | | | | |

பரீட்சையில் சித்தியடைவதற்கான சராசரிப் புள்ளிகள் :....................

(முழுப் பரீட்சையிலும் சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற வேண்டும் என்பதுடன் அனைத்துப் பாடங்களிலும் பெறுகின்ற புள்ளிகளின் கூட்டுத் தொகையின் சராசரி 45% ஆகக் காணப்பட வேண்டும்.)

மேற்குறித்த தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும், சரியானவை என்றும், இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி : ..........................

..................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

07-628